

ஈரோடு மாவட்டம் காலிங்கராயன் கால்வாய் மற்றும் கோபிசெட்டிபாளையம், கொடிவேரி அணையிலிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன் கோட்டை வாய்க்கால் பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. தண்ணீரை திறந்து வைத்தார். நிகழ்வுகளில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், கள்ளிப்பட்டி மணி, க.சின்னையன், ப.க.பழனிசாமி, டி.கே.சுப்பிரமணி, ஏ.பெருமாள்சாமி, ப.சீ.நாகராசன், எம்.சிவபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், கீழ்பவானி வடிநில செயற்பொறியாளர் திருமூர்த்தி, கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கண்ணப்பன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் நவமணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியம், பெரப்பன்சோலை மற்றும் பெத்தநாயக்கன்பட்டியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் தம்மம்பட்டி கிளையிலிருந்து தற்போது பி28 வழித்தட எண் வழியாக தற்போது தம்மம்பட்டி, நாரைக்கிணறு, இராஜபாளையம், மெட்டாலா உள்ளிட்ட வழித்தடங்களில் பேருந்து இயக்கப்பட்டு வந்த பேருந்தை நாரைக்கிணறு, பிலிப்பாக்குட்டை, கப்பலூத்து உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு புதிய பேருந்து வழித்தடத்தை நீட்டித்து அரசு பேருந்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மாவட்டம் முழுவதும் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் பங்கேற்பு!

நாமக்கல், ஜூலை 24 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் 1980 ஜூலை 20 ஆம் தேதி ஜான்சிராணி பூங்காவில் திமுக இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளை நினைவு கூரும் வகையிலும் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருச்செங் கோடு, மல்லசமுத்திரம், காளிப்பட்டி, குமார பாளையம் ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 1980 ஆம் ஆண்டு ஜூலை 20 ம் தேதி தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஒட்டி நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்று விழாவில் மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கொடிகளை ஏற்றி வைத்தார்

திருச்செங்கோடு நகரத்தில் நகர செயலாளர் தா. கார்த்திகேயன் தலைமையில் நகரமன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் ஆகியோர் முன்னிலையிலும், திருச்செங்கோடு ஒன்றியத்தில் விட்டம்பாளையம் மண் கரடு பேருந்து நிலையம், அக்கம்மாபாளையம் அருந்ததியர் தெரு, விட்டம்பாளையம் செங்குட்டை அருந்ததி தெரு, விட்டம்பாளையம் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் ஒன்றிய செயலாளர் ஜி.தங்கவேல் தலைமையிலும் மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கொடிகளை ஏற்றி வைத்து, இனிப்புகள் வழங்கினார்.

மல்லசமுத்திரம் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகதீஷ் தந்தை மல்லசமுத்திரம் முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் பெரியவர் குருசாமி அவர்களின் நினைவு கல்வெட்டினை மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் திறந்து வைத்து, கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்.

இதே போல் காளிப்பட்டி பகுதியில், மல்லசமுத்திரம் பேரூர் கழகத்தைச் சேர்ந்த மறைந்த முன்னாள் வார்டு செயலாளர்கள் ராமசாமி மற்றும் சிங் (எ) ஆனந்தன் அவர்களின் நினைவு கல்வெட்டினை திறந்து வைத்து, மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் கழக இரு வண்ண கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்.

மல்லசமுத்திரம் பேரூரில் சேலம் மெயின் ரோடு முன்னாள் ஒன்றிய செயலாளர் குருசாமி இல்லம் எதிரிலும், காளிப்பட்டி புதுப்பாவடி பகுதியிலும் தி.மு.க. கொடி ஏற்றி வைக்கப்பட்டது நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு கொடி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்நிகழ்வில் பேரூர் கழக செயலாளர் திருமலை, ஒன்றிய கழக செயலாளர் பழனிவேல், முன்னாள் பேரூராட்சி துணை தலைவர், 2 வது வார்டு செயலாளர் முருகேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ்குமார், கார்த்திக் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஜெகதீஷ், கார்த்திகேயன், முரளி, லோகநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி நகரம் அண்ணா நகர் பகுதியில் கூரை வீடுகள் தீயில் எரிந்து நாசமானது .பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் அரிசி, உப்பு, எண்ணெய் உள்ளிட்டவைகளை தி.மு.க. நகர செயலாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் மாவட்ட இலக்கிய அணி தலைவர் அண்ணாதாசன் வழங்கினார். நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், நகர்மன்ற உறுப்பினர்கள், நகர வார்டு கழக செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வழங்கினர்.

### தஞ்சை - புதுக்கோட்டை - மதுரை இடையே

# புதிய ரயில்பாதை அமைக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கவன ஈர்ப்புத் தீர்மானம்!



புதுடெல்லி, ஜூலை 24 - "புதுக்கோட்டை மக்களின் நீண்டகால கோரிக்கையான புதுக்கோட்டை - தஞ்சாவூர் சந்திப்புகள் இடையே புதிய இரயில் பாதை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா அவர்கள் 22.07.2024 அன்று நாடாளுமன்றத்தில் கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

அதில் "தஞ்சாவூர் - புதுக்கோட்டை - மதுரை ரயில் பாதை அமைக்க வேண்டும் என்பது புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மக்களாலும் நீண்ட காலமாக விரும்பப்படும் திட்டமாகும். இந்தக் கனவுத்திட்டம் நூற்றாண்டு பழமையானது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு அப்போதே அடிக்கல் நாட்டப்பட்டு அவை இன்னமும் அடையாளமாகத் திகழ்கிறது.

'தஞ்சாவூர்' இந்து மதத்தின் தெற்கு தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது. யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக 1000 ஆண்டுகள் பழமையான 'பெரிய கோயில்' இங்குதான் உள்ளது. மேலும் முக்கிய நவகிரக கோயில்களும், பாரம்பரிய சுற்றுலாத் தலங்களும் இங்குதான் உள்ளன. அதேபோல 'புதுக்கோட்டை' தமிழ்நாட்டின் முக்கியமான மத்திய மாவட்டங்களில் ஒன்றாகும். தஞ்சாவூர் மற்றும் மதுரைக்கு இடையே புதுகோட்டை வழியாக குறிப்பிடத்தக்க வணிக இணைப்புகள் உள்ளன. இது இந்தியா முழுவதும் உள்ள பல மொத்த விற்பனையாளர்களுடன் வணிக மற்றும் வர்த்தக இணைப்புகளைக் கொண்டுள்ளது.

இந்த இரயில் பாதை திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள தஞ்சாவூர், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, திருவாரூர் உள்ளிட்ட ஐந்திற்கும் மேற்பட்ட மாவட்டங்கள் பயனடையும். தற்போது இந்தப் பகுதிகளில் உள்ள இரயில் பாதைகள் முக்கியமாக பயணிகள் இரயில் இயக்கங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன. இந்த வழித்தடம் குறிப்பாக தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இராமேஸ்வரத்தில் இருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்லும் சரக்கு போக்குவரத்துக்கும் அதிகளவு பயனளிக்கும். அந்த வகையில் இந்த திட்டத்தின் மூலம் இரயில்வே துறைக்கு அதிக வருவாயும் கிடைக்கும்.

ஆனால் இன்றும் கவலைக்குரிய விதமாக, தஞ்சாவூர் புதுக்கோட்டை - மதுரை இரயில் பாதை என்பது பிங்க் புத்தகத்தில் கூட இடம் பெறாமல் தமிழக மக்களின் 100 ஆண்டு கால கனவு இரயில் பாதையாகவே நீடித்துவருகிறது.

எனவே, இரயில்வே அமைச்சர் இந்தப் பிரச்சினையை மிகுந்த முன்னுரிமையுடன் உடனடியாகப் பரிசீலித்து, அதற்கான அனுமதியை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டார்.




கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து (2023-2024), பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில், கும்பகோணம் மாநகராட்சி, 3 வது வார்டு, காளியம்மன் கோவில் தெருவில், ரூபாய் 4 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில், மினி வாட்டர் டேங்க் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர திமுக செயலாளருமான சு.ப.தமிழழகன், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும், மத்திய ஒன்றிய திமுக செயலாளருமான தி.கணேசன், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜெ.சுதாகர், கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் இரா.லெட்சுமணன், மாநகர துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன், பொருளாளர் எஸ்.ரவிச்சந்திரன், துணைச் செயலாளர் எஸ்.சிவானந்தம், மண்டல குழு தலைவர் கே.என்.எஸ்.ஆசைதம்பி, பகுதி கழக செயலாளர் இரா.செல்வராஜ், நிலைக் குழு தலைவர்கள் டி.ஆர்.அனந்தராமன், ச.பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் ஏ.ஹத்திஜா பீவி, வட்ட செயலாளர் எம்.ஹச்.ரஹமத் அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வி.ஜெ.உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் 50.ஆயிரம் மரக்கன்று நடும் நிகழ்ச்சி!

மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பங்கேற்பு!

திருவள்ளூர் ஜீலை 24 . திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 50,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி புல்லரம்பாக்கம் கிராமத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ. உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி மா.செ.ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றி மரக்கன்று நடும் விழா தொடங்கி வைத்தார் இதன் முன்னதாக கழகக் கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் பேரறிஞர் அண்ணா பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இதில் மாநில ஆதிதிராவிட நலக் குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.ஜெயசீலன், பிரேம் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் டி.தென்னவன், ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்வாணன்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தியாகராஜன் ஆவடி மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த் ஒன்றிய கழக நிர்வாகிகள் மனோகரன், வேலாயுதம், மதுரை வீரன், புன்னை குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பி.கே.இ. கபிலன், காக்களூர் சரவணன், பி.கே.இ. நாகராஜன், விஜய் சாரதி, ஹரிகிருஷ்ணன், உதயநிதி ரசிகர் மன்ற மாவட்ட நிர்வாகி கிரண் குமார் மற்றும் சுமன், ராஜமோகன், ராஜாராம், பார்த்திபன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

ஜூலை 24 (2009)



கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.


பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

ஜூலை 24 (2014)



திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.

உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.